2013 ஏப்ரல் 15]

சார்பாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடி அசைக்கப்பட்டு, 75 புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய பயன்பாட்டிற்கு சென்றுகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பகுதியில், இரண்டு மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதன் பிறகே பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். அந்த ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படுகின்றபொழுது, பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

221—

சிறப்புப் பொருளாதார மண்டலம்

***19611—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்னணு நிறுவன சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2002 ஆம் ஆண்டு, அரசு அறிவித்த தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையின்படி, சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப்

[2013 ஏப்ரல் 15

பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும் என்பதற்கிணங்க, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 8 இடங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது. மேலும், வேலூர் மற்றும் விழுப்புரத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் அமைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு தொகுதியில், மார்த்தாண்டம் என்னும் இடத்தில் மின்னணு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க உத்தேசம் எதுவும் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், 40–க்கும் மேற்பட்ட தொழில்நுட்பக் கல்லூரிகள் அங்கே இருக்கின்ற காரணத்தாலும் அங்கு ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைத்து, ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைத்துத் தர அரசு ஆவன செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறையில் உலக அளவில் ஏற்பட்டுள்ள மந்த நிலை காரணமாக, தகவல் தொழில்நுட்பவியல் துறை நிறுவனங்கள், விரிவாக்கத்திற்கு சுணக்கம் காட்டுகின்றன. இதற்குக் காரணம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிலத்தின் மதிப்பை பன்மடங்கு உயர்த்தியதுதான். ஒருசில நிறுவனங்களுடன் நடத்திய கலந்தாய்வில், இரண்டாம் நிலை நகரங்களில், நிர்ணயிக்கப்பட்ட நிலத்தின் விலை அதிகமாக உள்ளதாகக் கருதுகின்றனர். மேலும், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் மற்றும் ஓசூர் போன்ற 8 இடங்களில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைத்துள்ளது. இச்சிறப்புப்

2013 ஏப்ரல் 15]

பொருளாதார மண்டலங்களின்மூலம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 3,75,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 7.50,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கப் பெற்றுள்ளது.

முற்பகல் 11–30

மேலும், இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் முழுமையாகப் பங்கேற்கத் தகுந்த நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது. தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவை கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் அமைக்க வாய்ப்பு இருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

222—

மாணவர் விடுதி

***2896—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, இராயக்கோட்டை பகுதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களுக்குத் தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS